பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 19 புதன்கிழமை 04.08.2021 கதிர் 138

## பளை விபத்தில் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி மாவட்டம், பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காட்டுச் சந்தியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் அருகே உள்ள 2



# தேவை ஏற்பட்டால் முடக்கப்படும் நாடு

### சபையில் அரசு அறிவிப்பு

தேவை ஏற்பட்டால் மாத்திரமே நாடு முடக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவது குறித்து இன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி விஜேரத்ன, பொதுமக்களைக் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்க அரசு முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார். அத்தோடு, மாத்தளை - இரத்தோட்டையில் வைரஸ் பரவி வருகின்றது எனவும், இதன் விளைவாக ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மேலும், இரத்தோட்டையில் 2

## நாடாளுமன்றம் வந்தார் ஜனாதிபதி கோட்டாபய



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று முற்பகல் நாடாளுமன்றம் வந்திருந்தார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 2

## மேலும் 113 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 113 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 143ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் 2

# கொரோனாத் தொற்றாளர்களால் நிரம்பிவழியும் வைத்தியசாலைகள்

### அசமந்தப்போக்கில் அரசு; சபையில் ரணில் சீற்றம்



**கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. ஆனால், அரசோ அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது.**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால், ஆலோசனைக் குழுவொன்றைக் கூட்டி முடிவெடுக்க முடியாதா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.** 2

## முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினர்கள் இருவர் கைது

முன்னிலை சோசலிசக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சமீர கொஸ்வத்த மற்றும் அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2

### வீட்டில் மரணமடைந்த

## வயோதிபத் தம்பதியினருக்கு கொரோனாத் தொற்று உறுதி

காலி மாவட்டம், நாகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் உயிரிழந்த தம்பதியினர் கொரோனா வைரஸ் தொற்றினாலேயே உயிரிழந்துள்ளனர் என்று கராப்பிட்டிய போதானா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாகொடையைச் சேர்ந்த 73 வயது நபரும், 2

## யாழ். பல்கலை நுழைவாயில் முன்பாக அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இலவசக் கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக 2

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைது!



ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 26 ஆண்களும் 16 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் மற்றும் 2

## விசாரணை எதுவுமின்றி 94 நாள்களாக அறையில் என்னை மூடிவைத்துள்ளனர்

### சபையில் கோட்டா முன் ரிஷாத் ஆதங்கம்



விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் நான் 94 நாள்களாக மூடிய அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன்.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற 2

## யாழ். பல்கலை நுழைவாயில் முன்பாக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அரச பல்கலைக்கழக முறைமையை நீர்த்துப்போகச் செய்யும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறு, கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு, கல்வியை வியாபாரமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தைக் கிழித்தெறி, இலவசக் கல்வியைப் பாதுகாக்க இலங்கையராக ஒன்றிணைவோம், எதிர்கால மாணவர்கள் கடனாளிகளாக மாற வேண்டுமா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது உயர்கல்வியை இராணுவமயமாக்குவதையும் தனியார்மயமாக்குவதையும் எதிர்ப்போம் என்றும், ஜனநாயகம் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் எனவும் வலியுறுத்தப்பட்டது.

## ஜனாதிபதி செயலக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் வாகனப் பேரணி மூலம் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஜனாதிபதி செயலகத்துக்கான வீதியைக் குறுக்கிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் 10 வாகனங்களையும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## விசாரணை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் 100 நாள்களுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனவும், அவர் ஏன் கைது செய்யப்பட்டார் என்பது நாடாளுமன்ற சிறப்புரிமைகள் சரத்துக்கமைய சபாநாயகருக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல இன்று சபையில் தெரிவித்தார்.

இவ்வேளையில், சில விடயங்கள் தொடர்பில் தான் சபையில் உரையாற்ற, சபாநாயகரிடம் ரிஷாத் பதியுதீன் அனுமதி கோரியதைத் தொடர்ந்தும், இரண்டு நிமிடங்கள் உரையாற்ற சபாநாயகர் அவருக்கு அனுமதி வழங்கினார்.

ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது, சபையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் இருந்தனர்.

அவர் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

நான் ஏப்ரல் 24 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டேன். அதன்பின்னர் 5 நாள்களே விசாரணைகள் நடைபெற்றன.

நான் கைதுசெய்யப்பட்டு இன்றுடன் 122 நாள்கள் ஆகும் நிலையில், அவற்றில் 94 நாள்கள் என்னை அறையில் மூடி வைத்துள்ளனர். 24 மணிநேரமும் அந்த அறை மூடப்பட்டுள்ளது.

மலசலகூடத்துக்கு மட்டுமே வெளியே வர அனுமதிக்கின்றனர். ஆனால், இன்று வரையில் எந்தவித விசாரணைகளும் நடைபெறவில்லை.

என்னை ஏன் கைதுசெய்தீர்கள் என்று பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, எனது அமைச்சின் மேலதிக செயலாளர் பாலசுப்பிரமணியத்துடன் ஒன்றரை நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடியமை தொடர்பாகவே கைதுசெய்ததாகக் கூறினார்.

இதனைத் தவிர வேறு எந்தக் காரணத்தையும் முன்வைக்கவில்லை - என்றார்.

இதன்போது, உங்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு நிமிடங்களும் முடிந்துவிட்டன என்று சபாநாயகர் அறிவித்து, அவரது ஒலிவாங்கியும் துண்டிக்கப்பட்டது. தொடர்ந்தும் உரையாற்றுவதற்கு ரிஷாத் பதியுதீன் எம்.பி. அனுமதிகோரியபோதும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

## வயோதிபத் தம்பதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது 72 வயது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த வயோதிபர் கடந்த 2ஆம் திகதி வீட்டில் மரணமடைந்த நிலையில் அவரது சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்தமை தெரியவந்தள்ளது.

அதேபோன்று அவரது மனைவி நேற்றுமுன்தினம் அவரது வீட்டில் மரணமடைந்துள்ள நிலையில், அவரது சடலமும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. குறித்த இருவரது சடலங்களும் தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளுக்கு அமைவாகத் தகனம் செய்யப்பட்டுள்ளன.

## முன்னிலை சோசலிசக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று நாடாளுமன்ற நுழைவாயில் பகுதியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை, வன்முறையில் ஈடுபட்டமை மற்றும் மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தாக்கியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்த மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மேலும் 113 பேர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியேறும் 13 பிரதேசங்களில் 5 ஆயிரத்து 494 பேர் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 53 வாகனங்களில் பயணித்த 133 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## கொரோனாத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் சீற்றத்துடன் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால் அனைத்து வைத்தியசாலைகளிலும் கொரோனாத் தொற்றாளர்கள் நிரம்பி வழிகின்றனர்.

இது தொடர்பில் பல தொலைபேசி அழைப்புகள் நேற்று மாலை எனக்கு வந்தன.

இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந்த அமைச்சருக்கு அறிவுறுத்தி ஆலோசனைக் குழுவைக் கூட்டி வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடியாதா? - என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இந்த விடயத்தை சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்று இன்று மாலைக்குள் இதற்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருகின்றோம் - என்று கூறினார்.

## நாடாளுமன்றம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையில் நாடாளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து, 10.30 மணியளவில் ஜனாதிபதி சபைக்குள் வந்து சபை நடவடிக்கைகளை அவதானித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று தனியார் ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவில் இருந்து 12 ஆயிரத்து 500 ரூபா வரையில் அதிகரிப்பது தொடர்பான சட்டமூலம் தொடர்பான விவாதம் நடைபெற்றது.

அது தொடர்பான சட்டமூலத்தைத் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்தார்.

இதன்போது சிறிது நேரம் சபை நடவடிக்கைகளை அவதானித்த ஜனாதிபதி பின்னர் அங்கிருந்து சென்றார்.

## தேவை ஏற்பட்டால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடக்கத்தை அமுல்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கிறதா என்றும் ரோஹினி விஜேரத்ன எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, தேவைகளின் அடிப்படையில்தான் எந்த முடிவும் எடுக்கப்படும். அதற்கமைய தேவை ஏற்பட்டால் மாத்திரமே இரத்தோட்டையை முடக்குவதா? அல்லது முழு நாட்டையும் முடக்குவதா? என்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் - என்றார்.

## பளை விபத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெயர்ப்பலகையில் மோதுண்டே, இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நபர், பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தனக்குத் தானே குழி பறிக்கும் அரசு

முற்கூட்டியே தயாராக – ஆயத்தமாக – இருப்பதை விடுத்துப் பிரச்சினைகள் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற விட்டேத்தியான போக்கு நம் மத்தியில் பலருக்கும் உண்டு.

நமது இலங்கை அரசு கூட அதற்கு விதிவிலக்கு அல்ல என்றுதான் படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் துவண்டு கிடக்கும் நாட்டுக்கு கழுத்து மீதான பெரும் வளையமாக விழக்கூடிய விவகாரமாக சுற்றிவளைத்து வியூகமிட்டு வருகின்றது ஜி எஸ் பி வரிச்சலுகை ரத்து என்ற சுருக்கு.

ஆனால், அப்படியொரு நிலை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று பொறுப்பற்று விடயத்தை கையாளுகின்றது கோட்டா அரசு என்று ரோன்றுகின்றது. பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை முறைமை என்னும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் இலங்கைக்கு விசேடமாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தவிர ஏழு நாடுகளுக்கு இந்த விசேட சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச பட்டயங்களை ஏற்று அங்கீகரித்து முழு அளவில் நடைமுறைப்படுத்துதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நல்லாட்சி முறைமைகளைப் பின்பற்றுதல் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த சலுகை மேற்படி இலங்கை உட்பட 8 நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகை காரணமாக இந்த நாடுகளில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இறக்குமதி செய்யப்படும் தைத்த ஆடைகள், கடலுணவுகள் போன்றவற்றுக்கு வரிவிதிப்பில் விசேட விலக்கு உண்டு.

இதனால் இந்த எட்டு நாடுகளும் மற்றைய நாடுகளுடன் போட்டியில் முன் நின்று தமது உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இந்த ஏற்றுமதி மூலம் பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டித் தத்தமது நாடுகளின் பொருளாதாரத்தைத் தக்க தக்க வைக்க முடியும்.

கொவிட் தொற்றுப் பேரிடரினால் நலிந்து, சரிந்து, வீழ்ந்து கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை சற்றேனும் மூச்சுவிட பண்ணி உயிர்ப்புடன் வைத்திருப்பது இந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மூலமான ஏற்றுமதி தரும் அந்நியச் செலாவணி வருமானம்தான்.

ஆனால், அந்த வரிச்சலுகையை இலங்கைக்கு தந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அதற்காக நிறைவேற்றும்படி வற்புறுத்தும் மனித உரிமைகள் பேணல், நல்லாட்சி முறைமையை நடைமுறைப்படுத்துதல் போன்ற விடயங்களில் துடுக்குத்தனமாக நடந்து அந்த வாய்ப்பை கெடுத்துக் குட்டிச்சுவராக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது கோட்டா அரசு.

முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசு இதேபோன்ற திமிர்த்தனத்தில் நடந்ததால் 2010 ஆம் ஆண்டு இந்தச் சலுகையை நாடு இழந்தது.

ஆனால் ஜனவரி 2015 இல் அதிகாரத்திற்கு வந்த நல்லாட்சி அரசு ஐரோப்பிய ஒன்றியத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் கைகளில், கால்களில் விழுந்து மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு சர்வதேச நியமப்பாடுகளை நிறைவு செய்வோம் என்று வாக்குறுதி அளித்து, அந்தச் சலுகையை 2017இல் மீளப் பெற்றுக்கொண்டது.

அந்தச் சலுகை தொடர்வதால் இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் முற்ற மூச்சிழந்து, செத்து விடாமல் ஓரளவு நின்று, நிலைத்து, நீடித்துத் தாக்கப்பிடிக்கின்றது.

நாட்டின் 47 சதவீத ஏற்றுமதி இந்த ஆடை தொழில் மூலமே கிட்டுகின்றது. நாட்டின் கைத்தொழில் பணியாளர்களில் 15 வீதத்தினர் இந்த ஆடைத் தொழில் துறையில்தான் பணியாற்றுகின்றனர்.

பொதுவாக நாட்டின் தொழிலாளர்கள் வலுவில் 34 வீதத்தினர்தான் பெண்கள். ஆனால் ஆடை தொழில்துறையில் 78 வீதத்தினர் பெண்களாவர். இந்தத் தொழில் துறை மூலம் மூன்றரை லட்சம் தொழிலாளர்கள் நேரடியாகவும், அதைப் போல இரண்டு மடங்கு எண்ணிக்கையானோர் மறைமுகமாகவும் பணியாற்றி வருகின்றனர்.'

நாட்டின் மொத்த உற்பத்தி வர்த்தக ஏற்றுமதியில் 59 வீதம் ஆடைத் தொழிற்சாலைகள் மூலமே நடக்கின்றன. இந்த வகையில் கடந்த ஆண்டு 440 கோடி அமெரிக்க டொலர்( சுமார் 88 ஆயிரம் கோடி ரூபா) பெறுமதிக்கு ஆடை உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் சர்வதேச நியமங்களை ஏற்க மறுத்து, எதேச்சாதிகாரத்தைத் தொடரும் கோட்டா அரசு, அதன் மூலம் இந்த ஆடை ஏற்றுமதித் துறைக்கு ஆப்பு வைக்கப் போகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. அப்படியொரு நிலைமை வந்தால் நாடு அதற்குப்பின் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீளவே முடியாது என்பது திண்ணம்.

# அத்தியாவசிய பொருள்களுக்கு எந்தத் தட்டுப்பாடும் கிடையாது

## அரசு அறிவிப்பு



நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான அந்நிய செலாவணி இருப்பு அரசாங்கத்திடமுள்ளது. எனவே, இது தொடர்பில் அநாவசிய சிக்கலை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. மேலும் நாட்டில் பால்மா பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -பால்மா பற்றாக்குறை தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை. பற்றாக்குறை ஏற்படும் என்று நாம் கருதவில்லை. எதிர்வரும் காலங்களில் இலங்கையில் உள்நாட்டு பால்மா உற்பத்தியை அதிகரித்து விநியோகிப்பதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது தொடர்பில் சிக்கலை ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை கிடையாது என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

நாட்டில் இறக்குமதிக்காக மாதாந்தம் 5 கோடி டொலர் நிதி செலவிடப்படுகிறது. எரிபொருள் இறக்குமதிக்காகவும் 200 மில்லியன் டொலர் செலவிடப்படுகிறது.

நாட்டில் அந்நிய செலாவணி தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த காரணியாகும். இருந்த போதிலும் கடந்த மாதம் செலுத்தப்படவேண்டியிருந்த 100 கோடி டொலர் கடன் மீள செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஒழுங்கு முறைக்கமைய அந்நிய செலாவணி இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், டொலர் வருமானத்தை ஈட்டுவதற்கான வேலைத்திட்டங்களிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அதற்கமைய நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கான போதிய அந்நிய செலாவணி இருப்பு அரசாங்கத்திடம் காணப்படுகிறது. எனவே, இது தொடர்பில் சிக்கலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது. – என்றார்.

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தமிழர்களாகிய எமக்கு தேவை

## காணாமற்போனோர் உறவுகள் கோரிக்கை

அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எங்களுக்குத் தேவையென வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளன.

வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் போராட்ட பந்தலில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி ஊடக சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இலங்கையில் எந்த நிறுவனங்களையும் நாங்கள் நம்பவில்லை. மனித உரிமை உயர்ஸ்தானிகர் மிசால் பேச்லெட்டை மத்தியஸ்தராக்க விரும்புகிறோம்.

இதனை இலங்கை மனித உரிமை ஆணையம் ஏற்றுக்கொண்டால், அவர்களின் கோரிக்கையை பற்றி யோசிக்கலாம்.

மேலும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

இந்த ஆணைக்குழு, அனைவரினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்து, சிறந்த மனித உரிமை கலாசாரத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்கே உருவாக்கப்பட்டது. ஆனால் அவர்கள், ஒருபோதும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை.

இதேவேளை மே 2009 இல் ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு எங்கே இருந்தார்கள்?

மேலும் மட்டக்களப்பு, வவுனியாவில் தமிழர்கள் யாரும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அலுவலகத்தில் இல்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே அரசியல் தீர்வு, மனித உரிமைகள் சார்ந்த விடயங்களுக்கு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தற்போதைய சூழ்நிலையில் எங்களுக்குத் தேவை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# ரிஷாத்தை கட்சியில் இருந்து இதுவரை இடை நீக்கவில்லை

## எதிர்க்கட்சி மீது ஆளும்தரப்பு குற்றச்சாட்டு

*ரிஷாத் பதியுதீனை கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்ய எதிர்க்கட்சி இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆளும்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.*

*நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இவ்வாறு குறிப்பிட்டார்.*

*மேலும் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த 16 வயது சிறுமி தொடர்பான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

# இலங்கை, இந்தியா மற்றும் பல நாடுகளுக்கு பயணத்தடையை நீக்கியது ஐக்கிய அரபு இராச்சியம்



இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து செல்லும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையினை நாளை முதல் ஐக்கிய அரபு இராச்சியம் தளர்த்தவுள்ளது.

டெல்டா திரிவு காரணமாக பல்வேறு நாடுகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் அண்மையில் நேபாளம், இலங்கை, உகாண்டா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு தடை விதித்திருந்தது.

இந்நிலையில் புதிய கட்டுப்பாடுகளுடன், குறித்த நாடுகளில் இருந்து செல்லும் பயணிகள் விமானத்திற்கு நாளை முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லும் பயணிகள் நுழைவு அனுமதி பெற விண்ணப்பிக்க வேண்டும்.

அதற்கு மேலதிகமாக கொரோனாத் தடுப்பூசி செலுத்திய மற்றும் பயணிப்பதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைக்கான ஆவணங்கள் என்பனவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## ஒன்றாரியோவில் மொடர்னா கொவிட் தடுப்பூசி குப்பிகள் காலாவதியாகும் அபாயம்!




ஒன்றாரியோவில் மொடர்னா கொவிட் தடுப்பூசி குப்பிகள் தொடர்ந்து பயன்படுத்தப்படாமல் உள்ளன என மருந்தாளுநர் சங்கம் தெரிவித்துள்ளது.

வார இறுதிக்குள் மக்கள் வந்து தடுப்பூசி போடாவிட்டால், சேமித்த தடுப்பூசி இருப்பு வீணாகலாம் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஒன்றாரியோவின் தடுப்பூசி வெளியீட்டில் ஏற்பட்ட மந்த நிலை மற்றும் பைசர்- பயோஎன்டெக் தடுப்பூசிக்கான பொதுமக்களின் விருப்பம் ஆகியவற்றால் மருந்தகங்கள் தங்கள் மொடர்னா தடுப்பூசி மருந்தைப் பயன்படுத்துவது என்பது கடினமாகி உள்ளதாக மருந்தாளுநர் சங்கம் கூறுகிறது.

ஒன்றாரியோ மருந்தாளுநர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'முழுமையாக தடுப்பூசி போடப்பட்டது என்பதற்கு உலகளாவிய வரையறை இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். உண்மையில் முழு நம்பிக்கையுடன் அது மற்ற நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒட்டாவா பொதுச் சுகாதாரம், சமூக மருத்துவ மனைகளில் காலாவதியாகும் அபாயத்தில் எந்தத் தடுப்பூசிகளும் இல்லை என்று கூறுகிறது.



## அமெரிக்கப் படைகள் வெளியேறியமையே ஆப்கானில் வன்முறை அதிகரிக்க காரணமாம்

### ஆப்கான் ஜனாதிபதி

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் அவசர அவசரமாக வெளியேறியதே நாட்டில் வன்முறை அதிகரித்திருப்பதற்கு காரணம் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரஃப் கனி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அவசரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'ஆப்கான் அரசாங்கத்துக்கும் தலிபான்களுக்கும் இடையே பேச்சு நடத்த அவசரமாக (அமெரிக்காவால்) முன்வைக்கப்பட்ட திட்டமானது அமைதியை ஏற்படுத்தத் தவறியதுடன், ஆப்கான் மக்களிடையே சந்தேகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மாகாண தலைநகரங்கள் மற்றும் பெரிய நகர்ப்புற பகுதிகளை தலிபான்களிடமிருந்து பாதுகாப்பதற்கு தனது நிர்வாகம் தற்போது முன்னுரிமை அளிக்கும்.

நாட்டில் மோசமான வன்முறை ஏற்பட்டிருப்பதற்கு அமெரிக்க படைகள் அவசரமாக வெளியேறியதே காரணம். தலிபான்களுக்கு எதிராக தேசிய அளவில் ஒன்றுபட்டு நிற்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.

தலிபான்களுக்கு அமைதியில் நம்பிக்கையில்லை. அவர்களைத் தோற்கடிக்கும் திறன் அரசாங்கப் படைக்கு உள்ளது. இப்போது நடைபெற்று வரும் சண்டையில் அடுத்த 6 மாதங்களில் ஒரு மாற்றம் ஏற்படும். அந்த மாற்றம் தலிபான்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தும்' என கூறினார்.

ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளை திரும்பப் பெறுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

வெளிநாட்டு துருப்புக்கள் மீளப் பெறப்பட்டதை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டுள்ள தலிபான்கள், பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றி விட்டனர். இதன்படி, ஆப்கானிஸ்தானில் உள்ள 400 மாவட்டங்களில், 200 மாவட்டங்கள் வரை தற்போது தலிபான்கள் வசம் சென்றுள்ளன என தெரியவந்துள்ளது.

அத்துடன், ஆப்கானிஸ்தான் நாட்டின் 90 சதவீதப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்து விட்டதாக, தலிபான்கள் அண்மையில் அறிவித்தனர்.

ஈரான் மற்றும் பாகிஸ்தான் உடனான ஆப்கானிஸ்தானின் முக்கிய எல்லைப் பகுதிகள் அடங்களாக நாட்டில் பாதி பகுதிகளைத் தலிபான்கள் கைப்பற்றி விட்டனர்.

தலிபான்கள் தொடர்ந்து தங்கள் தாக்குதல் மூலம் முன்னேறிவருவதால், எதிர்வரும் மாதங்களில் பெரிய நெருக்கடி ஏற்படலாம் என மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்துள்ளன.



## டெல்டா வகை மாறுபாடு அதிகரிப்பு; பிரிஸ்பேனில் விதிக்கப்பட்டுள்ள பொதுமுடக்கம் தொடர்ந்து நீடிப்பு!

அவுஸ்ரேலியாவின் மூன்றாவது பெரிய நகரமான பிரிஸ்பேனில் விதிக்கப்பட்டுள்ள பொதுமுடக்கம், இன்றுடன் முடிவடைய விருந்தநிலையில், தற்போது ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சிலருக்கு அதிகவேகமாகப் பரவும் டெல்டா வகை மாறுபாடு உறுதிசெய்யப்பட்டுள்ளதால், குயின்ஸ்லாந்து மாகாண அரசாங்கம் இந்த முடிவினை எடுத்துள்ளது. இதனைத்தொடர்ந்து பொலிஸ் கட்டளையின் கீழ், சுமார் 300 இராணுவ வீரர்கள், குயின்ஸ்லாந்து மாகாணத்தில் வீடு வீடாகச் சென்று நேர்மறை சோதனை செய்தவர்கள் தங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவதை உறுதி செய்தனர். நாடு 16 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 70 சதவீத பேருக்கு தடுப்பூசி போடும்போது முடக்கநிலை கட்டுப்பாடுகள் குறையும் என பிரதமர் ஸ்கொட் மோரிசன் உறுதியளித்துள்ளார். எனினும் தற்போது தடுப்பூசி வீதம் 19 சதவீதமாக உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் 70 சதவீத மதிப்பை எட்டும் என்று மோரிசன் எதிர்பார்க்கிறார். இதனிடையே பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் டட்டன், தனது மகன் படிக்கும் பாடசாலையில் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

## பிரித்தானியாவில் கொவிட்-19 தொற்றினால் 59 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றினால், மொத்தமாக 59 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, மொத்தமாக 59லட்சத்து இரண்டாயிரத்து 354பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட ஆறாவது நாடாக விளங்கும் பிரித்தானியாவில், இதுவரை மொத்தமாக ஒரு லட்சத்து 29ஆயிரத்து 743பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், 21ஆயிரத்து 952பேர் பாதிக்கப்பட்டதோடு 24பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 12லட்சத்து 36ஆயிரத்து 459பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 889பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக, 45லட்சத்து 36ஆயிரத்து 152பேர் பூரண குணமடைந்துள்ளனர்.



# வேண்டும் வேண்டும்.. விசாரணை வேண்டும்!

## தமிழில் முழக்கம் எழுப்பும் பிற மாநில எம்.பிக்கள்

இந்திய நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைள் நடக்கும்போது பொதுவாக மக்களவை மற்றும் மாநிலங்களவையில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் கோஷங்கள் எழுப்பப்படுவது வாடிக்கை. ஆனால், சமீப நாள்களாக தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் கோஷங்கள் இரண்டு அவைகளிலும் எதிரொலிக்கின்றன.

தமிழ்நாடு தொடர்பான விவகாரங்கள் காரணமாக அவைகள் முடங்கவில்லை என்றாலும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் முழக்கம் எழுப்புவது தினசரி நடந்து வருகிறது. பிற மாநிலங்களைச் சேர்ந்த தமிழ் தெரியாத உறுப்பினர்கள்கூட வேண்டும் வேண்டும்... விசாரணை வேண்டும் என பெகாசஸ் உளவு மென்பொருள் விவகாரத்தில் முழக்கமிடும் நிகழ்வு பலரதும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து எதிர்ப்பு முழக்கம் எழுப்பி வரும் நிலையில், அதனை பல்வேறு மொழிகளில் நடத்த முடிவு செய்திருப்பதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. எனவேதான் தமிழ், பஞ்சாபி, மலையாளம் மற்றும் கன்னடம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளிலே இரண்டு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்புகிறார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் எதிர்க்கட்சிக் குழுவிலே உள்ளதால், அவர்கள் பிற மாநிலங்களை சேர்ந்தவர்களுக்கு தமிழில் முழக்கம் எழுப்ப கற்பித்துள்ளனர் என்றும், அதேபோலவே தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பஞ்சாபி உள்ளிட்ட ஏனைய மாநில மொழிகளில் முழக்கம் எழுப்ப கற்றுக் கொண்டுள்ளனர் என்றும் இதுதான் தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் நாடாளுமன்றத்தில் முழக்கங்கள் எதிரலிக்க காரணம் என காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் ஜோதி மணி தெரிவித்திருக்கிறார்.

மாநிலங்களவையிலும் தமிழில் முழக்கங்கள் தினசரி எழுப்பப்படுகின்றன என தி.மு.கவின் உறுப்பினர் திருச்சி சிவா சுட்டிக்காட்டியிருக்கிறார். நேற்று செவ்வாய்க் கிழமை மதியம் அவை ஒத்தி வைக்கப்பட்டபோது தமிழ் முழக்கங்கள் உரக்க ஒலித்துக் கொண்டிருந்ததை நேரலையில் அவதானிக்கமுடிந்தமை குறிப்பிடத்தக்கது.

# சி.பி.சி.ஐ.டி. பொய்யான வழக்குகளை பதிந்துள்ளது

## சிவசங்கர் பாபா நீதிமன்றத்தில் தகவல்



செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தில் ஸ்ரீ சுஷில் ஹரி சர்வதேசப் பாடசாலையில் படித்த போது சிவசங்கர் பாபா பாலியல் தொல்லை கொடுத்தார் என முன்னாள் மாணவிகள் அளித்த புகாரில் அவர் மீது போக்சோ சட்டத்தில் மூன்று வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. பிரிவின் விசாரணைக்கு மாற்றப்பட்ட நிலையில், தலைமறைவான சிவசங்கர் பாபாவை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் ஜீன் 16 ஆம் திகதி டெல்லியில் கைதுசெய்து செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

அவரது இரண்டு பிணை மனுக்கள் செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றம் மற்றும் மாவட்ட முதன்மை நீதிமன்றம் ஆகிய வற்றினால் தள்ளுபடி செய்யப்பட்டன. இதையடுத்து இரு வழக்குகளிலும் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அவரது மனுவில், கேளம்பாக்கம் பாடசாலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், சென்னையை அடுத்த நீலாங்கரையில் உள்ள 12 கிரவுண்ட் நிலத்தில் சம்ரக்ஷனா அறக்கட்டளையை மட்டுமே நடத்தி வருவதாகவும், ஆன்மிகம் மற்றும் தமிழ் சார்ந்த சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக மட்டுமே கேளம்பாக்கம் பாடசாலைக்கு சென்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். தனக்கும், பாடசாலைக்கும் எதிராக புகார் அளித்த பெண், புகார் அளிப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை அந்த பாடசாலையில் நாட்டிய நிகழ்வை நடத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தக் கொதிப்பு, நீரிழிவு மற்றும் இதயம் தொடர்பான பிரச்சினைகள் தனக்கு இருக்கின்றன எனவும், கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கூட சென்னை எம்.ஜி.எம். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளேன் எனவும் சிவசங்கர் பாபா குறிப்பிட்டுள்ளார்.

தன் மீதான வழக்கு பொய்யாகப்புனையப்பட்டது என்பதால், தலைமறைவாக வேண்டிய அவசியம் இல்லை என்றும், ஆன்மிகப் பயணம் செல்வதற்காக டெல்லி சென்ற தன்னை சி.பி.சி.ஐ.டி. கைது செய்து ஒவ்வொரு வழக்காகப் பதிவு செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவசங்கர் பாபாவின் இந்த பிணை மனுக்கள் நீதிபதி எம்.தண்டபாணி முன்னிலையில் விசாரணைக்கு வந்தன. அப்போது, அவர் ஒரு வாரத்தில் பதிலளிக்க சி.பி.சி.ஐ.டிக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஓகஸ்ட் 11ஆம் திகதிக்கு தள்ளிவைத்தார்.

# கொல்லப்பட்ட 9 வயதுச்சிறுமியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என ராகுல் வலியுறுத்து



டெல்லியில் ஒன்பது வயதுச் சிறுமியை பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தி கொலை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தாரை சந்தித்து ராகுல் காந்தி ஆறுதல் கூறியிருக்கிறார்.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி டெல்லி கன்டோன்மென்ட் பகுதியில் 9 வயது பட்டியினை சிறுமி பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தி கொலை செய்யப்பட்டார் எனகுற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அதுமட்டுமன்றி, சிறுமியின் உடல் வலுக்கட்டாயமாக தகனமும் செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திவரும் நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தாரை சந்தித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆறுதல் கூறியிருக்கிறார். இதுகுறித்து ஊடகவியலாளர்களிடம் ராகுல்காந்தி கருத்துத் தெரிவிக்கையில், நான் அந்தக் குடும்பத்தாருடன் பேசினேன். அவர்கள் நீதியைத் தவிர்த்து வேறு எதையும் கேட்கவில்லை. அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. அவர்களுக்கு உதவ வேண்டும். அதை நாங்கள் செய்வோம். உங்களுடன் துணை நிற்பேன் என அவர்களிடம் நான் தெரிவித்தேன். நீதி கிடைக்கும் வரை ராகுல் காந்தி அவர்களுக்குத் துணை நிற்பான் என்று கூறியிருக்கிறார்.

ராகுல் காந்தி தனது டுவிட்டரில், சிறுமியின் பெற்றோரின் கண்ணீர் ஒன்றைத்தான் உணர்த்துகிறது. அவர்களின் மகளுக்கு, இந்த நாட்டின் மகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். நீதியைத் தேடிய பயணத்தில் நான் அவர்களுடன் இருப்பேன் எனப் பதிவிட்டுள்ளார்.

# தடைசெய்யப்பட்ட குட்கா பொருள்களை விற்றால் குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்



போதை ஏற்படுத்தும் குட்காவின் விற்பனையை தடுக்கும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில், வாகன சோதனை செய்யப்பட்டதில் 8 இரு சக்கர வாகனங்கள், 7 கார்கள், 5 வான்கள் மற்றும் 3 லொறிகளில் குட்கா கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் வணிக வளாகங்கள், கடைகள், களஞ்சியங்கள் போன்ற இடங்களில் சோதனை செய்யப்பட்டு வழக்குகள் பதிவு செய்து பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தகவல்களை தமிழக காவல் துறை டி.ஜி.பி. அலுவலகம் வெளியிட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தமிழகம் முழுவதும் 4,027 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4,049 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், கடந்த ஜீலை 29 மற்றும் 30ஆம் திகதிகளில் சேலம் மாநகரத்தில் குட்கா புகையிலைப் பொருள்களைக் கடத்தி வந்து சரக்கு வாகனங்களில் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து இரு இடங்களில் நடத்திய சோதனைகளில் 3 லொறிகள் மற்றும் ஒரு பொலிரோ காரில் வைத்திருந்த 1.5 கோடி மதிப்புள்ள 9.78 தொன் குட்கா புகையிலைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக தமிழகம் முழுவதும் 6.04 கோடி மதிப்புடைய சுமார் 30,399 கிலோ குட்கா புகையிலைப் பொருள்கள் அண்மைய நாள்களில் கைப்பற்றப்பட்டன.

குட்கா கடத்தப்படும் வழிமுறைகள் மற்றும் குட்கா வியாபாரிகளின் விற்பனை வளையத்தைக் கண்டுபிடித்து அதன் முக்கிய புள்ளிகளை அடையாளம் கண்டு, கைது செய்து சிறையில் அடைக்கவும், அவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் கீழ் நடவடிக்கை எடுக்கவும் மாநகர காவல் ஆணையர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு, தமிழக காவல்துறை டி.ஜி.பி. சைலேந்திரபாபு அறிவுறுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாழடைந்த கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை 10 ஆம் கட்டை கித்துல் உதுவ பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலி – ஹபராதுவ பிரதேசத்திலிருந்து கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பத்தாம் கட்டை பகுதிக்கு வருகை தந்து வாடகை வீட்டில் வாழ்ந்து வந்த குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை முதல் காணாமல் போயிருந்த நிலையில் கிணற்றிலிருந்து சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இவ்வாறு மீட்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த பந்துல சிறிய பதிரன 67 வயது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# 20 ஆயிரத்தை தாண்டியுள்ளது கிழக்கில் கொரோனாத் தொற்று

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தாக்கம் மூன்றாவது அலையின் ஆரம்பத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்கள் அபாயகரமாக மாறியிருந்தன. இடைநடுவில் சற்று தணிந்திருந்தபோதிலும் கடந்த இருவாரகாலமாக அந்நிலைமை மாறி தற்போது வேகமாக தாக்கத் தொடங்கியுள் ளது. குறிப்பாக கல்முனை, மட்டக்களப்பு ,அம்பாறை ஆகிய பிரதேசங்களில் கூடுதலான தாக்கத்தை செலுத்த ஆரம்பித்துள்ளது.

தொற்றுக்களின் எண்ணிக்கை கடந்த திங்கட்கிழமை 20 ஆயிரத்து 21ஆக உயர்ந்துள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கில் மரணித்தவர்களின் எண்ணிக்கை 350 ஐ தாண்டியுள்ளது. அங்கு இதுவரை 364 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 339 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


# வாழைச்சேனையில் வீடொன்று தீக்கிரை

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை ஹைறாத் வீதியில் வீடொன்று தீக்கிரையான சம்பவமொன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை ஹைறாத் பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள மிக்ஸர் வியாபார நிலைய உரிமையாளரின் வீடே தீக்கிரையாகி உள்ளதுடன், வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தீயினால் உயிர் ஆபத்து எதுவும் இடம்பெறவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். தீயினால் வீட்டின் அறை முற்றாக தீக்கிரைளாகியுள்ளமையுடன், வீட்டில் இருந்த மின் பாவனைப் பொருள்கள், பெறுமதிமிக்க வீட்டுப் பொருள்கள், பிள்ளைகளின் கல்வி உபகரணங்கள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன தீயினால் முற்றாக தீக்கிரையாகியுள்ளன என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.



வீட்டின் உரிமையாளர் வியாபார நடவடிக்கையில் இருந்தார் எனவும். குடும்பத்தார் உறவினரின் வீட்டிற்குச் சென்ற சமயம் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை என்றும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.



# மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் உற்சவம் பண்டையகால முறையின்படி ஆரம்பம்

இலங்கையின் சின்னக்கதிர்காமம் எனப்போற்றப்படும் மட்டக்களப்பு,மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் பண்டைய கால முறையின் படி நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கந்த புராண கால வரலாற்றுடன் தொடர்புபட்ட ஆலயமாக மண்டூர் கந்தசுவாமி ஆலயம் விளங்கிவருகின்றது. கதிர்காமத்தின் வரலாற்றுடன் மட்டுமன்றி இங்கு இடம்பெறும் பூஜை முறைகளும் பண்டைய முறைமையை ஒத்ததாகவே காணப்படுகின்றது.அதற்கிணங்க நேற்று ஆரம்பமான ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமும் பண்டைய தமிழர்களின் நடைமுறைக்கு அமைவாகவே நடைபெற்றது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக ஆலய நிர்வாகத்தினர் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.21 தினங்கள் நடைபெறவுள்ள ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் நடைபெறும் திருவிழாக்கள் சிறப்பு வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. தங்கவேல் கொண்டுள்ள பேழை அலங்கரிக்கப்பட்டு அதற்கு தினமும் பூஜைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், ஆலய உள்வீதி வெளி வீதியுலா இடம்பெறவுள்ளதுடன் வள்ளியம்மன் தெய்வானையம்மன் ஆலயங்களுக்கும் பேழை கொண்டு செல்லப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்முறை ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்துதல், காவடியெடுத்தல்போன்ற நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இருபத்தொரு நாள்களுக்கு நடைபெறவுள்ள ஆலயத்தின் வருடாந்த உற்சவம், எதிர்வரும் 22 ஆம் திகதி மட்டக்களப்பு வாவியில் முருகப்பெருமானுக்கான தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அரசாங்க ஆவணங்களை போலியாக தயாரித்து வந்த நபரொருவர் கைது

அக்கரைப்பற்று நகரத்தில் அரசாங்க ஆவணங்களை போலியாக தயாரிப்பதில் ஈடுபட்டு வந்தார் எனகூறப்படும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அக்கரைப்பற்று நகரத்தில் போலி ஆவணங்களை தயாரித்து வந்த நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த நிலையத்திலிருந்து கணணி மற்றும் மடிக்கணணி உட்பட 26 உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போலி ஆவணங்கள் தயாரிப்பில் ஈடுபடுவதானது, சட்டவிரோத செயற்பாடாகும். அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு மூன்று வருடங்கள் அல்லது அதற்கும் அதிகமான வருடங்கள் சிறை தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும்.

இதேவேளை, அண்மையில் நபரொருவர் போலி ஆவணங்களை பெற்றுக் கொண்டு அதனை குருணாகலையில் அமைந்துள்ள நிதி நிலையத்துக்கு வழங்கியுள்ள சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், போலி ஆவணங்களை போன்று , போலி அடையாள அட்டைகளும் அச்சிடப்படுகின்றன என தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# திருகோணமலையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் குழுக்களிடையில் முறுகல் நிலை

திருகோணமலை கிண்ணியா நடுவூற்று கிராமத்தில் உள்ள குளம் ஒன்றில் மீன்பிடிக்க மீனவர் சங்கத்தினால் தடை விதிக்கப்பட்டது.

நடுவூற்று குள மீனவர் சங்கத்தினால் 4 மாதங்களுக்கு முன்னர் குளத்தில் விடப்பட்ட மீன்களை நேற்று பிடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்த போதே மீனவர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களிடையில் முரண்பாடுகள் தோன்றியது.

குளத்தில் சங்கத்தினால் வளர்க்கப்பட்ட மீன்களை சங்க உறுப்பினர்கள் அல்லாத மீனவர்கள் பிடிக்க முற்பட்டதனால் சங்கத்திற்கும் மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

முரண்பாடுகளில் ஈடுபட்ட மீனவர்கள் நடுவூற்று குள மீனவர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இல்லாமையினாலேயே குறித்த குளத்தில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டது. பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிழக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் திருகோணமலை மாவட்ட நீரியல் வள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எல். எம். இம்தியாஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோர் பிரச்சினையினை தீர்த்து வைத்துள்ளனர் சுமூகமான பேச்சுக்கு பின்னர் நடுவூற்று மீனவர் சங்க உறுப்பினர்கள் மீன் பிடித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# ஆஸ்திரேலியாவுடனான முதலாவது ரி-20 போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது




ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியுடன் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடர் தோல்வியை பங்களாதேஷ் அணி முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இதற்கு முன்னர் 2007 முதலாக நான்கு ரி-20 போட்டிகளில்இவ்விருஅணிகளும் விளையாடியிருக்கும் நிலையில், அனைத்திலும் ஆஸ்திரேலியாவே வெற்றி பெற்றிருந்தது.

டாக்காவில் நேற்று இடம் பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சகிப் அல் ஹஷன் 36 ஓட்டங்களையும், மொஹமட் நயிம் 30 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் ஜோஸ் ஹஸல்வூட் 3 விக்கெட்டுகளையும் மிட்செல் ஸ்ட்ராக் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 132 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மிட்செல் மார்ஷ் 45 ஓட்டங்களை எடுத்தார். பங்களாதேஷ் அணியின் நசும் அஹ்மட் 4 விக்கெட்டுகளையும் முஸ்டபிசுர் ரஹ்மானும், சொரிபுல் இஸ்லாமும் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின்நசும் அஹ்மட் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று நடைபெறுகிறது.



## ஒலிம்பிக் குத்துச்சண்டையில் வெண்கலம் வென்றார் இந்திய வீராங்கனை லவ்லினா

டோக்கியோ ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியில் இந்திய வீராங்கனை லவ்லினா வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார்.

69 கிலோ எடைப்பிரிவான மகளிர் வெல்ட்டர் வெயிட் அரையிறுதிப் போட்டியில் துருக்கி வீராங்கனை சுர்மெனெலி புசெனாஸிடம் இந்தியாவின் லவ்லினா தோல்வியுற்றார். இதனால் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு அவருக்குத் தவறிப்போனது. ஆயினும், காலிறுதிப்போட்டியில் அவரது பெறுபேறு காரணமாக அவருக்கு மூன்றாமிடம் வழங்கப்பட்டு வெண்கலப்பதக்கத்தை அவர் பெற்றிருக்கிறார். டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு கிடைத்த மூன்றாவது பதக்கம் இதுவாகும். ஏற்கெனவே மீராபாய் சானு, பி.வி.சிந்து ஆகியோர் டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கங்களை வென்றுள்ளனர்.

## டோக்கியோ ஒலிம்பிக்கில் 32 தங்கத்துடன் சீனா முதலிடம்



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் 32 தங்கத்துடன் சீனா தொடர்ந்தும் முன்னிலை வகித்துவருகின்றது. 32 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 69 பதக்கங்களைச் சீனா வென்றுள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா, 25 தங்கம், 29 வெள்ளி 22 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 76 பதக்கங்களைப் பெற்றுள்ளது. 20 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 39 பதக்கங்களை பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்திலும், ஆஸ்திரேலியா 15 தங்கம், 4 வெள்ளி, 17 வெண்கலம் அடங்கலாக 36 பதக்கங்களை பெற்று நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரித்தானியா 5 ஆவது இடத்திலும் ரஷ்யக் குழு, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.



## இந்தியா – இங்கிலாந்து முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகியுள்ளது. இந்தப் போட்டி டிரெண்ட் பிரிட்ஜில் நடைபெறுகிறது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகிறது. இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வாலுக்கு பயிற்சியின்போது காயம் ஏற்பட்டதால் ரோகித் சர்மாவுடன் கே.எல் ராகுல் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தர வரிசையைப் பொறுத்தவரை இந்திய அணி 2 ஆவது இடத்திலும் இங்கிலாந்து அணி 4 ஆவது இடத்திலும் உள்ளன. இதுவரை இந்தியாவும் இங்கிலாந்தும் 126 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளன. அவற்றில் இந்தியா 48 இலும் இங்கிலாந்து 29 போட்டிகளிலும் வென்றுள்ளன. இங்கிலாந்து மண்ணில் நடைபெற்ற 62 போட்டிகளில் 34 போட்டிகளில் இங்கிலாந்து வென்றுள்ள நிலையில் இந்தியா 7 இல் மட்டுமே வென்றுள்ளது.

இந்திய அணியில் நான்கு வேகப்பந்து வீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளதால் அஸ்வினுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இங்கிலாந்து அணியின் பென்ஸ்டோக்ஸ் திடீர் விடுப்பினை எடுத்துக்கொண்டதால் அவரது இடத்தில்சாம்கரனுக்குவாய்ப்புவழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் விளையாடும் இரு அணி வீரர்களதும் விவரம் –

**இந்தியா**

ரோகித் சர்மா, கே.எல். ராகுல், புஜாரா, விராட் கோலி (அணித்தலைவர்) , ரஹானே, ரிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாகூர், ஜஸ்பிரித் பும்ரா, மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ்.

**இங்கிலாந்து**

ரோரி பேர்ன்ஸ், டொமினிக் சிப்லி, ஸக்க்ரௌலி, ஜோ ரூட் (அணித்தலைவர்), ஜொனி பெயர்ஸ்டோ, டான் லோரன்ஸ், ஜோஸ் பட்லர் (விக்கெட் காப்பாளர்), சாம் கரன், ஒலி ரொபின்சன், ஸ்டூவர்ட் ப்ரோட், ஜேம்ஸ் அன்டர்சன்.



# தேவையான தடுப்பூசிகளை கிளிநொச்சிக்குத் தரலாம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

கிளிநொச்சிக்குத் தேவையான மேலும் 15 ஆயிரம் தடுப்பூசிகளைப் பெற்றுத் தருகிறேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் என அமைச்சரின் இணைப்பாளர் தவநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கிளிநொச்சியில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கடந்த 27 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி 6 ஆவது நாளாக 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்றும் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக தடுப்பூசிகளை மிகுந்த ஆர்வத்துடன் மக்கள் பெற்றுச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் கிளிநொச்சியில் வாழும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, மேலும் 15 ஆயிரம் தடுப்பூசிகள் தேவையாக உள்ளன என சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவர், 15 ஆயிரம் தடுப்பூசிகளையும் விரைவில் பெற்றுத்தருகிறேன் என உறுதியளித்தள்ளார். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா மரணம் மன்னாரில் அதிகரிப்பு!



## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னாரில் களுத்துறை பகுதியை சேர்ந்த 66 வயது பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வைத்தியர் த.விநோதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த 3 தினங்களாக மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் 120 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதில் மன்னார் தாழ்வுபாட்டு பகுதியைச் சேர்ந்த மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் 61 பேரும் செல்வநகர் பகுதியைச் சேர்ந்த 12 பேரும் பேசாலை பகுதியைச் சேர்ந்த 4 பேரும் உள்ளடங்குகின்றனர்.

மேலும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத 30 வயதுக்கு உட்பட்ட 30 பேர் குறித்த தொற்றாளர்களுடன் இனம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை மன்னாரில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கொரோனா மரணம் நிகழ்ந்துள்ளது. களுத்துறையில் இருந்து மன்னாருக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்ட 66 வயதுடைய பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சமூக ஊடகக் கருத்துக்கள் விசாரணையைத் தடுக்கின்றன

## அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு



ரிஷாத் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றன என அரசாங்கம் கூறியுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டார்.

இவ்வாறு சமூக வலைத்தளங்களில் வெளியாகும் சிறுமியின் மரணம் தொடர்பான தகவல்கள் விசாரணைகளைத் தடுக்கின்றன எனவும் அவர் கூறினார்.

இருப்பினும் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.





# ரணிலின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பவித்ரா

கொரோனா பரவல் சம்பந்தமான வாராந்த அறிக்கையை நாடாளுமன்றில் முன்வைக்குமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்வைத்த கோரிக்கையை சுகாதார அமைச்சு ஏற் றுக்கொண்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இதற்கான கோரிக்கையை முன்வைத்தார்.

இவ்வாறான வாராந்த அறிக்கையை நாடாளுமன்றில் முன்வைப்பதன் ஊடாக, நாட்டின் கொரோனா நிலைமைகள் தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இதனை வரவேற்ற சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கொரோனா சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிப்பதைவிட இது சிறந்ததாக அமையும் என்று தெரிவித்தார்.

அத்தோடு, கொரோனா பரவல் சம்பந்தமான வாராந்த அறிக்கையை நாடாளுமன்றில் முன்வைக்க எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.



# பெண் எம்.பிக்களை அரச தரப்பு சபையில் இழிவுபடுத்தும்போது சபாநாயகர் சிரிப்பதா?

## ரோஹிணி குமாரி ஆவேசம்

பெண் எம்.பிக்களை அமைச்சர்கள், அரச தரப்பு எம்.பிக்கள் இழிவுபடுத்தும்போது சபாநாயகர் சிரித்துக்கொண்டிருக்கிறார் என குற்றம் சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட எம்.பி. ரோஹிணி குமாரி விஜேரத்ன, சபாநாயகருக்கும் மனைவி, பிள்ளைகள் இருக்கின்றமையை மறந்து விடக்கூடாது எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த ரோஹிணி குமாரி விஜேரத்ன எம்.பி. மேலும் கூறுகையில் -

கடந்த நாடாளுமன்ற அமர்வில் இடம்பெற்ற நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தின் போது தலதா அத்துகோரல எம்.பி. உரையாற்றியபோது அவரை அமைச்சர்கள் சிலரும் அரச தரப்பு எம்.பிக்கள் சிலரும் மிக மோசமாக இழிவுபடுத்தினர்.

அருவருக்கத்தக்க கருத்துக்களை முன்வைத்தனர். இது நாடாளுமன்றம். பெண்களை கேவலப்படுத்துவதற்கான இடமல்ல. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 12 பேர் மட்டுமே பெண்களாகவுள்ள நிலையில் அவர்களால் தமது கருத்துக்களைக்கூட சுதந்திரமாக முன்வைக்க முடியாத நிலையுள்ளது.

பெண் எம்.பிக்களை அமைச்சர்கள், அரச தரப்பு எம்.பிக்கள் இழிவுபடுத்தும்போது சபாநாயகராகிய நீங்கள் சிரித்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்கும் மனைவி, பிள்ளைகள் இருப்பதை மறந்து விடக்கூடாது. - என்றார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன பதிலளிக்கையில், அந்த விடயம் தொடர்பில் நான் தேடிப்பார்க்கின்றேன் - என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேமலாப நிதியத்திலிருந்து பணம் எடுப்பதற்கு வரி அறவிடப்படாது



## அரசாங்கம் தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு எந்த விதமான வரியையும் விதிப்பதற்கு திட்டமிடவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்கு பதிலளிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இதனைத் தெரிவித்தார். மேலும் ஊழியர் சேம நிதிக்கு வரி விதிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் பொய்யானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2021இல் வெளியிடப்பெற்றது.